JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 12/2014 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW1 | Prosecution /Defence / Court | |
| Name | Mahesh | Caste | |
| Father's Name | Subramaniam | Calling | |
| Village | Rajendira prasad street | Religion | |
| Taluk | Perundurai | Age | |

(**A**1-**Mohammed Taj Maideen**, **S/o**.**Saiyadu Sarbudeen is absent**. **For A**1, **petition U/s**.317 **Cr**.**P**.**C**. **filed and allowed**. **A**3-**Alavudeen Batsha**, **S/o**.**Saiyadu Sarbudeen is present**)

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 23.05.2023

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். 02.04.2013 ம் தேதி காலை சுமார் 8 மணிக்கு நான் ஈரோடு பிரப் ரோடு சென்றபோது போலிசார் வாகன சோதனை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது நானும், பிரபாகரனும் அங்கே இருந்ததால் எங்களை சாட்சியாக இருக்க கேட்டுகொண்டதால் நாங்கள் இருவரும் சாட்சியாக இருக்க ஒப்புகொண்டோம்.

2)அந்த வழியில் TN 56 C 8788 என்ற இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் போலிசார் சந்தேகத்தின்பேரில் பிடித்து விசாரிக்க அவர்களது பெயர்களை கூறினார்கள். ஒருவர் முகமது தாஜ் மைதீன் என்றும், மற்றொருவர் அலாவுதீன்பாட்ஷா மற்றும் அப்துல் பாஷித் என்றும் கூறினார்கள். அவர்களை 8 மணிக்கு கைது செய்தார்கள். மூவரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். மூவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பிரபாகரனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம்.

3)அவர்களை அழைத்து சென்றால் வேப்பம்பாளையம், இ.பி.நகரில் திருடிய டிவிஎஸ் எக்ஸல் வண்டியை எடுத்து ஆஜர் செய்வதாக 1 ம் எதிரி

கூறினார்கள். மற்ற இரண்டு எதிரிகளை விசாரித்து அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பதிவு செய்து என்னிடமும், பிரபாகரனிடமும் சாட்சி கையொப்பங்களை பெற்றார்கள். 1 மற்றும் 3 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். (**1 மற்றும் 3 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 1 மற்றும் 3 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது சாட்சி கையொப்பத்தை பிரபாகரன் செய்தார்.

4)2 ம் எதிரி அப்துல் பாஷித் ஒப்படைத்த பணம் ரூபாய் ஆயிரத்தை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 3 ம் எதிரி அலாவுதீன் பாட்ஷா எடுத்து ஆஜர் செய்த இரும்பு கம்பியை கைப்பற்றுதல் மகசரில் உதவி ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றினார்கள். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக பெருந்துறை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**1,3 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1)**நான் பைனான்ஸ் தொழில் எத்தனை வருடமாக செய்து வருகிறேன் என்றால் இருபது வருடமாக செய்து வருகிறேன். அதனால் எனக்கு பெருந்துறை, ஈரோடு பகுதி தெரியும் என்றால் சரிதான். பெருந்துறை காவல் நிலையத்தில் இருந்து ஈரோடு பிரப் ரோடு சுமார் 30 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் 25 கி.மீ. தூரம் இருக்கும். பெருந்துறையில் இருந்து மகாராஜா கல்லூரி சுமார் 3 கி.மீ. தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். மகாராஜா கல்லூரி ஈரோடு - பெருந்துறை ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். மகாராஜா கல்லூரியில் இருந்து ஈரோடு பிரப் ரோடு சுமார் 20-25 கி.மீ. தூரம் இருக்கும்.

2)அன்றைய தினம் பெருந்துறையில் இருந்து 8 மணிக்கு கிளம்பினேன். நான் அங்கு போனபோது போலிசார் அந்த இடத்தில் இருந்தார்கள் என்றால்

சரிதான். நான் அந்த இடத்திற்கு சென்றபோது போலிசார் நிறைய பேரை நிறுத்தி விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அங்கு விசாரித்து கொண்டிருந்த நிறைய நபர்கள் யார் என்னவென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு விசாரித்து கொண்டிருந்த நபர்கள் சொன்னதை போலிசார் எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான்.

3)அங்கிருந்த நபர்களிடம் போலிசார் ஒவ்வொரு கேள்வியாக கேட்க அந்த நபர்கள் பதிலாக சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் போலிசார் ஏழு எட்டு, பேரை விசாரித்தார்கள். அந்த ஏழு, எட்டு பேரையும் விசாரித்து போலிசார் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் எல்லாரிடமும் வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. சிலபேரிடம் வாங்கினார்கள். போலிசார் தனித்தனியாக விசாரித்த நபர்களின் அடையாளம் எனக்கு தற்போது நினைவில்லை. போலிசார் தனித்தனியாக விசாரித்தபோது அந்த நபர்கள் போலிசாரிடம் என்ன சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4)நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.3,4 கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள கையொப்பத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரிதான். போலிசார் என்னை அழைத்ததன்பேரில் நான் காவல் நிலையம் சென்ற கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் என்னை காவல் நிலையம் போலிசார் வரச்சொன்னார்கள் என்றால் 02.04.2013ம் தேதி வரச்சொன்னார்கள். எத்தனை மணிக்கு காவல் நிலையம் வந்தேன் என்றால் காலை 9. - 9.15 மணிக்கு காவல் நிலையம் சென்றேன்.

5)அன்றயை தினம் போலிசார் வரச்சொன்னதன்பேரில் நான் வீட்டில்

இருந்து காவல் நிலையம் வந்து கையொப்பம் செய்துவிட்டு என்னுடைய பைனான்சிற்கு சென்றுவிட்டேன். அன்றைய தினம் பைனான்ஸ் வேலை முடித்துவிட்டு காலை 10 மணிக்கு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். எதற்காக இந்த கையொப்பங்களை செய்தேன் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த விபரத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். பைனான்ஸ் வைத்திருப்பதால் எனக்கு காவல் நிலையம் சென்றுவரும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல.

6)அன்றைய தினம் என்னுடைய செல்போனுக்கு காவல் நிலையத்தில் இருந்து போன் வந்தது என்றால் சரிதான். அவ்வாறு போன் வந்தபோது எதற்காக காவல் நிலையம் வரச்சொல்கிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அந்த இடத்தில் போலிசார் வாகனத்தணிக்கை செய்த பின்னிட்டு தான் வரச்சொன்னார்கள். அதனால் அந்த வழக்கு சம்பந்தமாக வரச்சொல்லியிருப்பார்கள் என நினைத்துகொண்டேன்.

7)காவல் நிலையத்தில் கம்யூட்டரில் டைப் செய்தார்கள் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. டைப் செய்த பேப்பரில் கையொப்பம் செய்தேனா என்றால் டைப் செய்த பேப்பரில் கையொப்பம் செய்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. அன்றைய தினம் மேட்டுக்கடை இ.பி. நகருக்கு சென்றேனா என்றால் இரண்டு, மூன்று இடங்களுக்கு அழைத்து சென்றார்கள். ஆனால் மேட்டுக்கடை இ.பி. நகருக்கு போனமாதிரி எனக்கு தெரியவில்லை. வேறு எந்தெந்த இடத்திற்கு சென்றேன் என்றால் ஜீவா நருக்கு அழைத்து சென்றார்கள். ஜீவா நகரில் நான் சென்ற இடம் வீடா, காலி இடமா என்று எனக்கு நினைவில்லை. மற்ற இடங்களுக்கு சென்ற இடமும் வீடா, காலி இடமா என்று தெரியுமா என்றால் அது எனக்கு தற்போது நினைவில்லை.

8)என்னுடன் வந்த வந்தவரின் பெயரும் முகவரியும் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் பைனான்ஸ் தொழில் செய்வதால் காவல் துறையினர் எனக்கு வேண்டப்படவர் என்றும், அதனால் அவர்கள் கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று

சொன்னால் சரியல்ல. லோகநாதன் வண்டி காணாமல் போனது சம்பந்தமாகதான் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். வேறு எதுவும் வழக்கு சம்பந்தமாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முன்னிலையில் பணம் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். என் முன்னிலையில் இரும்பு கம்பியை போலிசார் எடுத்து கைப்பற்றினார்களா என்றால் இல்லை. இரும்பு கம்பியையோ, பணத்தையோ எதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.